மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி அமைந்தவுடன் கிராமப்புற மாணவர்களின் நலன் கருதி, தமிழகத்தில் இதுவரை 10 பாலிடெக்னிக் கல்லூரிகள் உருவாக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையில், நாகப்பட்டினம் தொகுதியில் ஒரு கல்லூரி வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, வேதாரண்யம் தொகுதியில் கல்லூரிக்கு வேண்டிய இடத்தைக் கொடுப்பதற்கும் ஒருவர் முன்வருகிறார் என்கிற கருத்தையும் சொல்லியிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிர்காலத்தில் வேதாரண்யம் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

124—

இயற்கை உரம்

***28797**—**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு இயற்கை உரம் அதிக அளவில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு இயற்கை உரம் அதிக அளவில் கிடைக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள்மூலம், பசுந்தாள் உரம், நீலப்பச்சைப்பாசி மற்றும் இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகள் விநியோகம் செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 2]

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நம் முன்னோர்கள் விவசாயம் செய்கின்றபோது, மாட்டுச் சாணி, ஆட்டுச் சாணி மற்றும் கோழிச் சாணியைப் போட்டுத்தான் விவசாயம் செய்தார்கள். அதனால்தான் மண் வளம் பாதுகாக்கப்பட்டு விளைச்சல் இயற்கையாக நன்றாக இருந்தது. ஆனால், இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் விஞ்ஞான வளர்ச்சியிலே, இரசாயன உரங்களை அதிகமாகப் பயன்படுத்துவதால் மண் வளம் பாதிக்கப்படுகிறது. ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு இயற்கை உரம் அதிக அளவில் கிடைப்பதற்கு நல்ல வழிகளைச் சொல்லி இருக்கின்றார்கள் என்று இருந்தபோதும்கூட, ஊரக வளர்ச்சித் துறையிலேகூட கிராமங்களில் இருக்கின்ற திடக் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கு ஒரு வழியையும் கூறியிருக்கின்றார்கள். அது வரவேற்கக்கூடிய கருத்து. அதைப்போல, ஒவ்வொரு கிராமத்திலும் இயற்கை உரம் கிடைப்பதற்கு சுய உதவிக் குழுக்கள் மூலமாகவோ அல்லது 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலை செய்கின்ற ஆட்களை வைத்தோ அரசே இதை எடுத்து கிராமம் வாரியாக இந்த இயற்கை உரத்தைக் கொடுத்தால், விவசாயிகளுக்கும் நல்லது, மண்ணுக்கும் நல்லது, வரும் சந்ததியினருக்கும் நல்லது என்பதைக் கூறி, இதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இயற்கை உரம் அதிக அளவிலே கிடைக்கும் வகையில், நடப்பாண்டில் வேளாண்மைத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாக இயற்கை வேளாண்மையை விவசாயிகளிடையே ஊக்குவிக்க ஏதுவாக, இரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் உபயோகத்தைத் தவிர்த்து பல்வேறு

திட்டங்கள்மூலம் தாவரப் பூச்சிக்கொல்லி மருந்துகள், இயற்கை உரங்கள், மண்புழு உரங்கள், இயற்கை உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் போன்ற இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் காரணிகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. இதற்காக கடந்த ஆண்டிலேகூட 9 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, இதிலே ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு முழுமையாக இவையெல்லாம் வழங்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. ஒரு பொதுவான கேள்வி. விவசாயப் பல்கலைக்கழகத்திலிருந்து தனியாக தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்டது. என்ன காரணத்தாலோ அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். தேனி மாவட்டம்தான் தோட்டக்கலைப் பல்கலைக்கழகத்திற்குச் சிறந்த இடம் என்பது அறிஞர்கள் கூற்று. அந்தத் தோட்டக்கலைப் பல்கலைக்கழகத்தை மீண்டும் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இயற்கை உரம் பற்றிய கேள்வி. இருந்தாலும்கூட, நம்முடைய உறுப்பினரின் கோரிக்கை வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

திரு. ஆ. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான நிலக்கோட்டை தொகுதி கிராமங்கள், பூ மற்றும் பழ வகைகள் அதிகமாக விளையும் கிராமங்களாக

2013 ஏப்ரல் 2]

இருக்கின்றன. இயற்கை உரமான மண் புழு உரத்தை வாங்க வேண்டுமென்றால், மதுரை வேளாண்மைக் கல்லூரிக்குச் செல்ல வேண்டும். அங்கேதான் அந்த உரம் இருக்கின்றது. என்னுடைய தொகுதியிலேயே இந்த இயற்கை உரத்தைத் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் மண் புழு உரம் தயாரிப்பதற்காக விவசாயிகள் யாராவது முன்வந்தால், அதற்கான உதவிகளை அரசு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் முதுகெலும்பு விவசாயம். இன்றைக்கு விவசாயம் செய்ய முடியாமல் படிப்படியாக அது அழிந்து, குறைந்து வந்துகொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், ஒரு பக்கம் விவசாயப் பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பது இல்லை, மறுபக்கம் விவசாயத்திற்கு ஆட்கள் கிடைப்பது இல்லை. இந்த 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டத்திலே இருக்கின்ற ஆட்களை விவசாயத்திற்குத் திருப்பிவிட்டால், நிச்சயமாக விவசாய மக்களுக்கும் பயன்படும், விவசாயமும் செழிக்கும் என்பது என்னுடைய கருத்து. நிச்சயமாக அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இயற்கை உரம் பற்றிய கேள்வியாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாகப் போட்டால், அதற்கு உண்டான பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*